**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**2015 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மாணவர் சங்க துணைவிதி**

பின்னர் திருத்தப்பட்டவாறான, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 112(3) ஆம், 135 ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பேரவையினால் இயற்றப்பட்ட துணை விதியாகும்.

01. இத்துணை விதியானது, 2015 ஆம் ஆண்டின் மாணவர் சங்கத் துணை விதி இல. 03 என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க துணை விதி வலுவுக்கு வருவதோடு, 2000 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மாணவர் சங்க துணை விதி நீக்கப்படுகிறது.

**பகுதி I**
**பீட மாணவர் சங்கம்**

02. (i) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்திற்கும் ஒரு மாணவர் சங்கம் இருத்தல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு பீட மாணவர் சங்கமும் அத்தகைய ஒவ்வொரு பீடத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மாணவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு பீடத்திற்கான மாணவர் சங்கமானது, நேரடியான வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட, பதின் மூன்று (13) உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

(iv) ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்திற்கும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், இத்துணை விதியின் பகுதி 44 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கீழ்வரும் பதவி தாங்குகளை உள்ளடக்கிய ஒரு நிறைவேற்றுக் குழுவைத் தமக்குள் தெரிவுசெய்ய வேண்டும்.

(அ) தலைவர்
(ஆ) உப-தலைவர்
(இ) செயலாளர்
(ஈ) பத்திராதிபர்
(உ) கனிஷ்ட பொருளாளர்

(v) பீட மாணவர் சங்கத்தின் பதவி தாங்குகளைக் கொண்ட ஐந்து (05) அலுவலர்களுள் குறைந்தபட்சம் இருவர் பெண்களாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், போதியளவு பெண் மாணவ பிரதிநிதிகள் பீட மாணவர் சங்கத்திற்குத் தெரிவு செய்யப்படாத போது, இந்த ஏற்பாடு ஏற்புடையதாகாது.

**பகுதி II**
**பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதிகள்**

03. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 48(1)(உ) க்கு அமைவாக, ஒவ்வொரு பீட சபைகளுக்கும் இரண்டு மாணவ பிரதிநிதிகள் இருத்தல் வேண்டும். இதனகத்துப் பின்னர், பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதிகள் என குறிப்பிடப்படும்.

04. அத்தகைய பீட சபைகளுக்கான அத்தகைய மாணவ பிரதிநிதிகள் பீட மாணவர் சங்க உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான அதே தேர்தலில் நேரடியாக வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும்.

05. பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதிகளுக்கான தேர்தல்களுக்கான நியமனப்பத்திரம் பிரத்தியேகமாகக்

கோரப்படல் வேண்டும். அத்துடன், பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக மாணவர்கள் ஒரு பிரத்தியேகமான வாக்குச் சீட்டு ஒன்றைப் பயன்படுத்தல் வேண்டும்.

06. ஒரு மாணவர் அதே மாணவர் சங்க ஆண்டில் பீட மாணவர் சங்கத்திற்கான உறுப்பினர் ஒருவராக பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ள போது, அவன் அல்லது அவள் பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதி பதவிக்காக பெயர் குறித்துரைக்கப்படல் ஆகாது.

07. பீட சபைகளுக்ான இரண்டு மாணவ பிரதிநிதிகள் அத்தகைய பீடத்தின் பீட மாணவர் சங்கத்தின் மற்றும் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், அவர்கள் குறித்துரைக்கப்பட்ட பீட மாணவர் சங்கம் அல்லது பல்கலைக்கழக மாணவர் சங்கத்திற்கு பதவிவழி உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியுடையவரல்ல.

## பகுதி III
## பீட மாணவர் சங்கங்கள் மற்றும் பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

08. பீட மாணவர் சங்கங்கள் மற்றும் பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுவதற்கான ஒரு வேட்பாளர் பின்வரும் தகுதிகளை உடையவராக இருத்தல் வேண்டும்.

(i) ஒரு மாணவன் அவன் அல்லது அவள் குறிப்பிட்ட ஆண்டில் கற்கை நெறியில் 36 அல்லது 1/3 மூன்றில் ஒரு தேர்ச்சிகளில் எது குறைவோ அதனை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அத்துடன்,

(ii) ஒரு மாணவன் அல்லது மாணவி பீட மாணவர் சங்க உறுப்பினர் தெரிவுக்காகவோ அல்லது பீட சபைகளுக்கான மாணவர் பிரதிநிதிது:தவப் பதவிக்காக தெரிவு செய்யப்படுவதற்கோ தேர்தலில் நிற்கின்ற அதே கல்வியாண்டில் அதத்கைய கற்கை நெறியில் குறைந்தபட்சம் 18 தேர்ச்சிகளுக்காக பதிவு செய்திருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், கற்கைநெறி ஒன்றில் இறுதியாண்டில் இருக்கின்ற வேட்பாளர் 18 தேர்ச்சிகளைப் பூர்த்த செய்வதற்கு எஞ்சியுள்ளவிடத்து அம்மாணவன் அல்லது அம்மாணவி அத்தகைய கற்கைநெறியைப் பூர்த்தி செய்வதற்குத் தேவைப்படுகின்ற எஞ்சிய தேர்ச்சிகளுக்காக பதிவு செய்தல் வேண்டும்.

09. இடைநிறுத்தப்பட்ட மாணவரோ அல்லது ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மாணவரோ பீட மாணவர் சங்க தேர்தல் அல்லது பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதித்துவத் தேர்தலில் நிற்கத் தகுதியுடையவராக மாட்டார்.

10. ஒரு மாணவன்/மாணவி ஒன்றுக்கு மேற்பட்ட கற்கை நெறிகளுக்காக பதிவு செய்யப்பட்டு ஏற்கனவே கீழே உள்ள பதவிகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள போது பீட மாணவர் சங்கத்திற்காக அல்லது பீட சபைகளுக்கான மாணவர் பிரதிநிதி தேர்தலுக்காக பெயர் குறித்துரைக்க தகுதியுடையவராக மாட்டார்.

(i) இரண்டு மாணவ சங்க வருடங்களில் ஏதேனும் பீட மாணவர் சங்கத்திற்கு (அடுத்தடுத்த ஆண்டு அவசியமில்லை) அல்லது

(ii) இரண்டு மாணவ சங்க வருடங்களில் ஏதேனும் பீட சபைகளுக்கான மாணவர் பிரதிநிதி (அடுத்தடுத்த ஆண்டு அவசியமில்லை) அல்லது

(iii) இரண்டு மாணவ சங்க வருடங்களில் ஏதேனும் பீட சபைகளுக்கான மாணவர் பிரதிநிதி மற்றும் ஏதேனும் பீட சபைகளுக்கான மாணவர் பிரதிநிதி ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ள போது (அடுத்தடுத்த ஆண்டு அவசியமில்லை)

11. ஒரு அபேட்சகர் பீட சபைகளுக்கான மாணவ பிரதியாகத் தெரிவு செய்வதற்கு பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ள வேளையில் அதே மாணவர் சங்க ஆண்டில் ஏதேனும் பீட மாணவர் சங்கத்திற்கான தேர்தலுக்காக பெயர் குறித்துரைக்கப்பட இயலாது.

12. ஒரு அபேட்சகர் பீட மாணவர் சங்கத்திற்கான தேர்தலுக்காக பெயர் செய்வதற்கு பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ள வேளையில் அதே மாணவர் சங்க ஆண்டில் ஏதேனும் பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதியாகத் தெரிவு செய்வதற்கு பெயர் குறித்துரைக்கப்பட இயலாது.

13. ஒரு மாணவர் வாக்களிக்கத் தகுதியுடையவரா இல்லையா அல்லது தேர்தலுக்கு நிற்கத் தகுதியுடையவரா இல்லையா என்பது சம்பந்தமான விடயம் தேர்தல் அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். இவ்வாறான தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட எவரேனும் மாணவர் இவ்வாறான தீர்மானம் அவருக்கு அறிவிக்கப்பட்ட 48 மணித்தியாலங்களுக்குள் இத்தீர்மானத்திற்கு எதிராக பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு மேன்முறையீடு செய்யலாம். இவ்வாறான மேன்முறையீடு சம்பந்தமாக பிரதம நிறைவேற்று அதிகாரியின் தீர்மானம் முற்றும் முடிவானதும் ஆகும்.

## பகுதி IV
## தேர்தலில் வாக்களிப்பதற்கான தகுதி

14. பீட மாணவர் சங்கத்திற்கும் பீட சபைகளுக்கான மாணவர் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் நோக்கத்திற்காக பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் ஒரு தொகுதியாக அமைதல் வேண்டும்.

15. (i) பீட மாணவர் சங்கத்திற்கும் பீட சபைகளுக்கான மாணவர் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் நோக்கத்திற்காக பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் மட்டம் 3 இல் உள்ள கற்கை நெறிக்கு அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலோ குறைந்தபட்சம் 9 தேர்ச்சிகளுக்கு பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(ii) மாணவர் ஒருவர் -

(அ) தேர்தலுக்கான அறிவித்தல் வழங்கப்படும் திகதிக்கு முன்பதாக தன்னுடைய பதிவினை புதுப்பிக்கத் தவறியுள்ளவிடத்து அல்லது

(ஆ) இடைநிறுத்தப்பட்டோ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள போது அத்தகைய தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுடையவராக மாட்டார்.

16. ஒரு மாணவர் வாக்களிக்கத் தகுதியுடையவரா இல்லையா அல்லது தேர்தலுக்கு நிற்கத் தகுதியுடையவரா இல்லையா என்பது சம்பந்தமான விடயம் தேர்தல் அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். இவ்வாறான தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவர் இவ்வாறான தீர்மானம் அவருக்கு அறிவிக்கப்பட்ட 48 மணித்தியாலங்களுக்குள் இத்தீர்மானத்திற்கு எதிராக பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு மேன்முறையீடு செய்யலாம். இவ்வாறான மேன்முறையீடு சம்பந்தமாக பிரதம நிறைவேற்று அதிகாரியின் தீர்மானம் முற்றும் முடிவானதும் ஆகும்.

17. ஒரு மாணவன் அல்லது மாணவி பதிவு செய்யப்பட்டுள்ள கற்கை நெறிகளின் எண்ணிக்கை எவ்வாறு இருந்த போதிலும் ஒரு தேர்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குகளை அளிக்க உரித்துடையவரல்ல. அத்தகைய வாக்கு பீட மாணவர் சங்க அங்கத்தவர்கள் மற்றும் அதே பீடத்தின் பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதிகளுக்காக அளிக்கப்படல் வேண்டும்.

## பகுதி V
## பிராந்திய நிலைய வாரியான பிரதிநிதித்துவம்

18. பீட மாணவர் சங்கம் மற்றும் பீட சபைகளுக்கான மாணவர் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பதாக தேர்தல் அதிகாரி கீழே உள்ள பிரிவு 19 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு பிராந்திய நிலையத்திலும் இருக்க வேண்டிய பீட மாணவ சங்கப் பிரதிநிதிகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

19. (i) (அ) ஒவ்வொரு பிராந்திய நிலையத்திலும் இருந்து குறைந்தபட்சம் ஒருமாணவபிரதிநிதி பீட மாணவர் சங்கத்தில் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய பிராந்திய நிலையத்தில் குறிப்பிட்ட கல்வியாண்டில் பட்டப் படிப்பு கற்கை நெறிக்கு குறிப்பிட்ட பீடத்தில் குறைந்தபட்சம் 50 மாணவர்கள் பதிவு செய்திருத்தல் வேண்டும். அத்தகைய மாணவர்களின் எண்ணிக்கைகளைத் தீர்மானிப்பதற்காக ஒவ்வொரு கற்கை நிலையமும் பொருத்தமான முறையில் பிராந்திய நிலையத்துடன் இணைக்கப்படும்.

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு 19(அ)(i) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு பிராந்திய நிலையத்திலும் இருந்து ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்திற்கும் அவசியமான குறைந்தபட்ச மாணவர் எண்ணிக்கைகளை ஒதுக்கீடு செய்த பின்பு எஞ்சியுள்ள பீட மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஒவ்வொரு பிராந்திய நிலையத்திலும் குறிப்பிட்ட கல்வி ஆண்டில் பட்டப் படிப்புக்காக பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் விகிதாசார முறைப்படி ஒவ்வொரு பீடத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய மாணவர்களின் எண்ணிக்கைகளைத் தீர்மானிப்பதற்காக ஒவ்வொரு கற்கை நிலையம் பொருத்தமான முறையில் பிராந்திய நிலையத்துடன் இணைக்கப்படும்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு 19(அ)(i) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒரு பீட மாணவர் சங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட பிராந்திய நிலையத்தில் அவசியமான மாணவர் பிரதிநிதித்துவம் இல்லாத வேளையில், அத்தகைய பிராந்திய நிலையத்தில் உள்ள மாணவர்கள் வேறு எந்த பிராந்திய நிலையத்தில் வாக்களிக்க வேண்டும் என்பதை தேர்தல் அதிகாரி தீர்மானித்தல் வேண்டும்.

20. மேலே குறிப்பிட்ட பிரிவு 19(அ) விலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு பீடத்திற்கும் ஒவ்வொரு பிராந்திய நிலையத்திலும் இருந்து பிரதிநிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்பு, அந்த தகவல்கள் ஐந்தாம் அட்டவணையில் குறிப்பிட்டவாறு ஒவ்வொரு பிராந்திய நிலையத்திலும் இருந்து ஒவ்வொரு பீடத்திற்கும் உரிய இடங்கள் தேர்தல் அதிகாரியினால் தேர்தல் செய்தி மூலம் மாணவர்களுக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

21. ஒவ்வொரு தகுதி பெற்ற வாக்காளரும் அவன் அல்லது அவளுடைய வாக்கினை ஒன்றிணைக்கப்பட்ட பிராந்திய நிலையங்களில் உள்ள இடங்களை பூர்த்தி செய்வதற்கு தான் பதிவு செய்யப்பட்ட பிராந்திய நிலையம் அல்லது கற்கை நிலையத்தில் வாக்களித்தல் வேண்டும். ஒன்றிணைக்கப்பட்ட பிராந்திய நிலையங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவ பிரதிநிதிகளும் பீட மாணவர் சங்கத்தின் குழுவினை அமைப்பர்.

## பகுதி VI
## தேர்தல் அதிகாரிகள், மாணவர் ஆலோசகர்கள் மற்றும் ஆலோசனை அளிக்கும் குழு என்பவற்றினுடைய நியமனம், பணி மற்றும் கடமைகள்

22. ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்தினதும் மாணவர் சங்கத்திற்குரிய 13 அங்கத்தவர்களுக்கான தேர்தலை நடத்துவதற்குத் தேவையான அதிகாரி, பதில் தேர்தல் அதிகாரி, பிரதித் தேர்தல் அதிகாரி, தலைமை தேர்தல் அதிகாரி, உத்தியோகத்தர்கள் மேலும் தேவைப்படும் உதவித் தேர்தல் அதிகாரிகள் ஆகியோரை பிரதம நிறைவேற்று அதிகாரி நியமிப்பார்.

23. தேர்தலை நடத்துதல் சம்பந்தமாகத் தேர்தல் அதிகாரி, பதில் தேர்தல் அதிகாரி, பிரதி தேர்தல் அதிகாரி, பிரதம தேர்தல் அதிகாரி ஆகியோருக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு, பிரதம நிறைவேற்று அலுவலர் ஆலோசனைக் குழு ஒன்றினை நியமிப்பார்.

24. மாணவர் சங்கம் வருடம் முடிவடைவதற்கும், ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்தினதும், பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினதும் தேர்தல் முடிவடைந்ததற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், பிரதம மாணவ ஆலோசகரும் ஒவ்வொரு பீடத்தினதும் கல்விசார் மாணவ ஆலோசகரும் எந்தவொரு மாணவர் தொடாபான விடயத்தையும் கையாள வேண்டும்.

## பகுதி VII

## பீட மாணவர் சங்கங்கள் மற்றும் பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதிகள் ஆகிய இடங்களுக்கான நியமனப் பத்திரங்கள்

25. (i) பிரிவு 8 இன் ஏற்பாடுகளுக்கு அமைய, பீட மாணவர் சங்கத்தின் உறுப்பினர் அல்லது பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதிகள் தொடாபான தேர்தலுக்கான அபேட்சகராக எந்தவொரு பதிவு செய்யப்பட்ட மாணவரும், அதே பீடத்தைச் சார்ந்த இரண்டு பதிவு செய்யப்பட்ட மாணவரால் முன்மொழிபவர், வழிமொழிபவராக ஒப்பமிடப்பட்ட நியமனப்பத்திரங்களை வழங்கலாம்.

(ii) நியமனப்பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்கின்ற போது தேர்தல் அபேட்சகர் முன்மொழிபவர், வழிமொழிபவர் ஆகியோர் தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி முன்னிலையில் நியமனப்பத்திரத்தில் கையொப்பமிட வேண்டும்.

(iii) இத்தகைய நியமனப்பத்திரம் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதிரியைப் போன்றிருத்தல் வேண்டும்.

(iv) பீட மாணவர் சங்கம் அல்லது பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதி சம்பந்தமான தேர்தலுக்கான ஒரு தேர்தல் அபேட்சகருடைய தேர்தல் நியமனப்பத்திரம் அந்த அபேட்சகரினால் குறித்துரைக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன்பு தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரியிடம் கையளித்தல் வேண்டும்.

26. (i) 25 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய சமர்ப்பிக்கப்படாத ஏதாவது நியமனப்பத்திரம் தேர்தல் அதிகாரியினால் மற்றும் அல்லது பிரதி தோர்தல் அதிகாரியினால் நிராகரிக்கப்படல் வேண்டும்.

(ii) நியமனங்களை ஏற்கும் முடிவு நேரம் பூர்த்தியாகும் வரை அபேட்சகர் ஒருவர் தமது நியமனப் பத்திரங்களை வாபஸ் பெற்றுக்கொள்ளலாம்.

27. தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி நியமனப்பத்திரம் ஒன்றைப் பெற்ற பின்பு, நியமனப்பத்திரத்தில் உள்ள தகவல்கள் சரியானவையா எனப் பார்த்து, எழுத்து மூலம் சான்றிளிக்கும் பொருட்டு, நியமனப்பத்திரத்தின் பிரதியொன்றை பதிவாளர் அல்லது பிரதி பதிவாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கு அமைய இல்லாத எந்தவொரு நியமனப்பத்திரத்தையும் தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி நிராகரித்தல் வேண்டும்.

28. (i) அபேட்சகர் ஒருவரின் நியமனம் சம்பந்தமாக, பின்வரும் அடிப்படைகளில் ஒன்றிலோ அல்லது அனைத்திலுமோ பதியப்பட்ட மாணவர் ஒருவரிடம் இருந்து ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின், இரண்டாம் அட்டவணையில் கொடுக்கப்பட்ட படிவத்தில் தேர்தல் அதிகாரியிடமோ மற்றும் அல்லது பிரதித் தேர்தல் அதிகாரியிடமோ அவற்றைச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்;

(அ) இத்துணை விதியின் பகுதி iii மற்றும் பகுதி iv க்கு அமைய, அபேட்சகர், தேர்தலில் நிற்கவோ அல்லது வாக்களிக்கவோ தகுதியற்றவராவர்;

(ஆ) முன்மொழிபவர் மற்றும் அல்லது வழிமொழிபவர் திறந்த பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்படாத மாணவராக இருப்பின்;

(இ) அபேட்சகர், முன்மொழிபவர் மற்றும் வழிமொழிபவர் தன்னுடைய அல்லது தம்முடைய கையொப்பம் அல்லது கையொப்பங்களை நியமனப் பத்திரத்தில் தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி முன்னிலையில் இடாது விடின்;

(ஈ) இத்துணை விதியின் ஏற்பாடுகளுக்கு அமைய நியமனப்பத்திரம் இணைக்கப்படாவிடின்;

(ii) நியமனங்களைத் தபால் செய்த நாளிற்கு மறு நாள் 12.00 மணித்தியாலத்திற்கு முன்னர் சமர்ப்பித்தாலொழிய அபேட்சகர் ஒருவரின் நியமனப்பத்திரம் தொடர்பான ஆட்சேபனைகளை தேர்தல் அதிகாரியினால் மற்றும் பிரதி தேர்தல் அதிகாரியினால் ஏற்றுக்கொள்ள முடியாது.

29. (i) ஆட்சேபனைகளை ஏற்பதற்கான நேரம் குறித்துரைக்கப்பட்ட பின்பு, தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி கூடியளவு தாமதியாது, ஒவ்வோர் அபேட்சகரின் நியமனப் பத்திரத்தின் ஆட்சேபனைகள் தொடர்பாக, தீர்மானம் எடுத்து ஆட்சேபித்தவருக்கோ அல்லது அபேட்சகருக்கோ மாத்திரமன்றி இருவருக்கும் அத்தீர்மானத்தினை அறிவித்தல் வேண்டும்.

(ii) தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி தேவை ஏற்படுமிடத்து ஆலோசனைக் குழுவைக் கலந்தாலோசிக்கலாம்.

(iii) தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி எந்த அடிப்படையின் கீழ் தீர்மானத்தை எடுத்தார் என்பதை ஆட்சேபித்தவருக்கோ அல்லது அபேட்சகருக்கோ மாத்திரமன்றி இருவருக்கும் அறிவித்தல் வேண்டும்.

30. (i) எந்தவொரு மாணவ அபேட்சகரும், தமது நியமனப்பத்திரம் தேர்தல் அதிகாரியினால் மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரியினால் நிராகரிக்கப்பட்டமை தொடர்பான தீர்மானத்தை ஏற்காவிடின், அத்தீர்மானம் அனுப்பியதிலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் அதற்கு எதிராக மூன்றாம் அட்டவணையில் இருக்கும் படிவத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு தன்னுடைய மேன்முறையீட்டினை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பி வைக்கலாம்.

(ii) இத்தகைய மனுக்களை தேர்தல் அதிகாரி பிரதம நிறைவேற்று அதிகாரியிடம் முடிவிற்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

(iii) இவ்விடயம் தொடர்பாக பிரதம நிறைவேற்று அதிகாரியுடைய தீர்மானம் முற்றும் முடிவானதும் ஆகும்.

31. அபேட்சகர் ஒருவரின் நியமனப்பத்திரத்தைப் பாதிக்கக்கூடிய எவையேனும் பிழைகள் மற்றும் போதாமை பற்றி தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி பதிவு செய்து கவனமாகக் கையாள வேண்டும்.

32. தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கான காலம் முடிவடைந்ததில் இருந்து 48 மணித்தியாலங்களுக்குள் அனைத்து வலிதான நியமனப்பத்திரங்களையும் நியமனப்பத்திரம் செய்த இடத்திற்கு வெளியே பகிரங்கப்படுத்தல் வேண்டும்.

## பகுதி VIII

## பீட மாணவர் சங்கங்கள் மற்றும் பீட சபைகளுக்கான மாணவர் பிரதிநிதிகளுக்கான தேர்தல்

33. பீட மாணவர் சங்கத்திற்கான 13 உறுப்பினர்கள் மற்றும் பீட சபைகளுக்கான 02 பிரதிநிதிகள் ஆகிய தேர்தலைப் பொறுத்த வரையில், இரண்டு வகைகள் ஒவ்வொன்றிற்கும் உரிய பதவிகளின் எண்ணிக்கைக்கேற்ப செல்லுபடியாகும் நியமனப்பத்திரங்கள் கிடைக்கப் பெற்றால், தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி குறிப்பிட்ட பீட, மாணவர் சங்கத்தின் மற்றும் பீட சபைகளுக்கான முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைப் பிரகடனம் செய்தல் வேண்டும்.

34. பீட மாணவர் சங்கத்திற்கான 13 உறுப்பினர்கள் மற்றும் பீட சபைகளுக்கான 02 பிரதிநிதிகள் ஆகிய தேர்தலைப் பொறுத்த வரையில், இரண்டு வகைகள் ஒவ்வொன்றிற்கும் உரிய பதவிகளின் எண்ணிக்கைக்கேற்ப செல்லுபடியாகும் நியமனப்பத்திரங்கள் கிடைக்கப் பெற்றால், பிரதம நிறைவேற்று அதிகாரி பீட மாணவர் சங்கத்தின் 13 உறுப்பினர்களையும் பீட சபைகளுக்கான இரண்டு மாணவ பிரதிநிதிகளையும் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்துகின்ற திகதி அல்லது திகதிகளை தீர்மானித்தல் வேண்டும்.

35. நியமனப்பத்திரங்கள் முடிவடைவதற்கும் வாக்களிக்கும் திகதிகளுக்கும் இடையில் 21 நாட்கள் குறைவாகவோ அல்லது 45 நாட்களுக்கு மேற்பட்ட இடைவெளியோ இருத்தல் ஆகாது. எவ்வாறாயினும், தன்னுடைய கட்டுப்பாட்டை மீறிய ஒரு சூழ்நிலை காரணமாக அவசியமானது எனக் கருதுகின்றவிடத்து பிரதம நிறைவேற்று அதிகாரி அத்தகைய திகதிகளையும் தேர்தல் நடைபெறும் இடங்களையும் மாற்றலாம்.

36. பீட மாணவர் சங்கத்திற்கான 13 உறுப்பினர்கள் மற்றும் பீட சபைகளுக்கான 02 பிரதிநிதிகள் ஆகிய தேர்தலைப் பொறுத்த வரையில், இரண்டு வகைகள் ஒவ்வொன்றிற்கும் உரிய பதவிகளின் எண்ணிக்கைக்கேற்ப செல்லுபடியாகும் நியமனப்பத்திரங்கள் கிடைக்கப் பெற்றால், நியமனப் பத்திரங்கள் ஏற்கப்பட்ட அபேட்சகரினது பெயரைப் பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும், இணைய தளத்திலும், செய்தி ஏட்டிலும், அபேட்சகர்களால் வழங்கப்படுமிடத்து அவர்களது சுய விபரம், செய்திகள் முதலியவற்றுடன் தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி பகிரங்கப்படுத்தல் வேண்டும்.

37. ஒவ்வெரு பீட மாணவர் சங்கத்தினதும் 13 உறுப்பினர்களுக்கான மற்றும் பீட சபைகளுக்கான 02 பிரதிநிதிகள் ஆகியோரை தெரிவு செய்வதற்கான தேர்தலை, தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடத்த வேண்டும். அத்தேர்தலில் பயன்படுத்துவதற்கான வாக்குச் சீட்டுக்கள் நான்காம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு தயாரிக்கப்பட வேண்டும்.

38. (i) பீட மாணவர் சங்கத் தேர்தலில் மற்றும் பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதிகள் ஆகிய இடங்களுக்கு போட்டியிடும் ஒவ்வோர் அபேட்சகரும், தேர்தல் நடைபெறும் இடத்தில் கணக்கிடல் நடைபெறும் பொழுது, கணக்கிடும் முகவராகத் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டு, அதே பீடத்தைச் சார்ந்த இரண்டு பதிவு செய்யப்பட்ட மாணவர்களை நியமிக்கலாம்.

(ii) இவ்வாறான ஒவ்வொரு நியமனமும், எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட மாணவரின் பெயர், பதிவிலக்கம் என்பன குறிப்பிடப்பட்டு, வாக்களிப்பு முடிவடைவதற்கு 48 மணித்தியாலங்களுக்குள் அபேட்சகரினால் தேர்தல் அதிகாரி மற்றும் பிரதி தேர்தல் அதிகாரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(iii) அத்தகைய அறிவித்தல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கள் வழங்கப்படாதவிடத்து, வாக்கு கணகக்கெடுக்கின்ற போது அத்தகைய அபேட்சகர் கணக்கெடுக்கும் பிரதிநிதியாக செயற்பட முடியாது.

39. தேர்தல் நடைபெறும் காலப்பகுதி இரண்டு வாரங்களை உள்ளடக்கிய 09 தொடர்ச்சியான நாட்களை விஞ்சுதல் ஆகாது.

40. தேர்தல் பூர்த்தியடைந்த பின்பு ஒரு பிராந்திய நிலையத்தின் தலைமைத்தேர்தல் அதிகாரி இரகசிய வாக்கெடுப்புகளைக் கணக்கெடுத்து அந்தக் கணக்கெடுப்புகளின் பெறுபேறுகளை தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதித்தேர்தல் அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

41. (i) வாக்குச் சீட்டுக்கள் எண்ணிக்கை முடிவில் தேர்தல் பீட மாணவர் சங்கத்திற்கான தேர்தல் முடிவுகளை பின்வரும் ஏற்பாடுகளுக்கு அமைய தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி வெளியிடுவார்.

(அ) பிரிவு 20 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதிக வாக்குகளை பெற்ற அபேட்சகர்களின் அடிப்படையில் ஒவவொரு பீடத்திற்கும் ஒவ்வொரு பிராந்திய நிலையத்தில் இருந்து மாணவர் பிரதிநிதிகள் நிரப்பப்படும்.

(ஆ) எஞ்சிய அபேட்சகர்கள், ஒவ்வோர் அபேட்சகருக்கும் கிடைக்கப்பெற்ற வாக்குகளின் வரிசைக்கிரம அடிப்படையில் பட்டியற்படுத்தப்படுவர். இதற்காக பட்டியற்படுத்தப்பட்டோரைக் கொண்டு அவதானிப்பாளர் குழு ஒன்று அமைக்கப்படும்.

(ii) உறுப்பினர்கள் தெரிவிற்கான தேர்தலின் போது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அபேட்சகர்களுக்கு சம அளவான வாக்குகள் கிடைத்துள்ளதாகக் காணப்படுமிடத்து, மேலதிக வாக்கு ஒன்று அளித்தல் ஓர் அபேட்சகர் அவ்வுறுப்பினர்களுள் ஒருவராகத் தெரிவு செய்யப்படுவதற்கு உரித்துடையவராக்கும். இவ்வாறான மேலதிக வாக்கு எந்த அபேட்சகருக்கு அளிக்கப்பட வேண்டும் என்பது சீட்டுக் குலுக்குவதன் மூலம் தீர்மானிக்கப்படும்.

(iii) குறிப்பிட்ட (i) ஆம், (ii) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய பட்டியற்படுத்தப்பட்ட 13 அபேட்சகர்களும், பீட மாணவர் சங்கத்தின் உறுப்பினர்களாகப் பிரகடனப்படுத்தப்படுவர்.

42. (i) வாக்குச் சீட்டுக்கள் எண்ணிக்கை முடிவில் தேர்தல் பீட சபைகளுக்கான மாணவர் பிரதிநிதிகளுக்கான தேர்தல் முடிவுகளை பின்வரும் ஏற்பாடுகளுக்கு அமைய தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி வெளியிடுவார்.

(அ) பீட மாணவர் சபைகளுக்கான தேர்தலில் அதிக வாக்குகளை பெற்ற பொருத்த்மான பீடங்களில் பெயர் குறித்துரைக்கப்பட்ட இரண்டு அபேட்சகர்கள் முறையாகத் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பீட சபைகளுக்கான அத்தகைய பிரதிநிதிகள் என்பது பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) உறுப்பினர்கள் தெரிவிற்கான தேர்தலின் போது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அபேட்சகர்களுக்கு சம அளவான வாக்குகள் கிடைத்துள்ளதாகக் காணப்படுமிடத்து, மேலதிக வாக்கு ஒன்று அளித்தல் ஓர் அபேட்சகர் அவ்வுறுப்பினர்களுள் ஒருவராக அத்தகைய பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு உரித்துடையவராக்கும். இவ்வாறான மேலதிக வாக்கு எந்த அபேட்சகருக்கு அளிக்கப்பட வேண்டும் என்பது சீட்டுக் குலுக்குவதன் மூலம் தீர்மானிக்கப்படும்.

43. தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி தேர்தல் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டதில் இருந்து 14 நாட்களுக்குள் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அறிக்கை ஒன்றினை வழங்குதல் வேண்டும்.

## பகுதி IX

## பீட மாணவர் சங்கத்திற்கான அலுவலர் தெரிவு மற்றும் பீட மாணவர் சங்கங்கள் மற்றும் பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதிகளுடைய அலுவலக கால எல்லை

44. (i) பீட மாணவர் சங்கத்தின் முதல் கூட்டம் நடத்தப்பட வேண்டிய திகதியை பிரதம நிறைவேற்று அதிகாரி தீர்மானிப்பார். இக்கூட்டத்தில் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்களையும் பீடச் சபைக்கான இரண்டு மாணவர் பிரதிநிதிகளையும் தெரிவு செய்வர். இவ் உப விதியின் 41 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, இத்திகதியானது, பீட மாணவர் சங்கத்திற்கு 13 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ii) பீட மாணவர் சங்கத்தின் முதல் கூட்டத்திற்கு தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி தலைமை தாங்குவதோடு, தேர்தலின் தாற்பரியத்தைப் பேணி, தேர்தலை சுமுகமாக நடத்த தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

45. பீட மாணவர் சங்கத்தின் பதவிதாங்குனர்களையும் மற்றும் இரண்டு (02) மாணவ பிரதிநிதிகளையும் தெரிவு செய்வதற்கான தேர்தல் முடிவடைந்த பின்பு பல்கலைக்கழக பிரதம நிறைவேற்று அதிகாரியினால் பீட மாணவர் சங்கத்திற்கு உரிய சிரேஷ்ட பொருளாளராக பல்கலைக்கழக ஆசிரியர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

46. பீட மாணவர் சங்கம் கல்வி ஆண்டின் ஒவ்வொரு மாதத்திலும் குறைந்த பட்சம் ஒரு கூட்டத்தைக் கூட்ட வேண்டும். இவ்வாறான ஒவ்வொரு கூட்டத்திற்குரிய உறுப்பினர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை ஐந்து ஆகும்.

47. (அ) ஒரு பீட மாணவர் சங்கத்தின் ஒவ்வொரு பதவிதாங்குநரும், ஏனைய உறுப்பினர்களும், தாம் தெரிவு செய்யப்பட்ட மாணவர் சங்க ஆண்டு இறுதியில் தமது பதவிகளை இழப்பர்.

(ஆ) பீட மாணவர் சங்கத்தின் எந்தவொரு பதவி தாங்குநரும், ஒரு மாணவர் சங்க வருடத்திற்கு மேற்பட அதே பதவியை வகிக்க இயலாது.

(இ) உத்தியோகத்தர் எவராவது அல்லது ஏனைய உறுப்பினராவது,

(i) பதிவு செய்யப்பட்ட மாணவர் அந்தஸ்தை இழக்கின்ற விடத்து;
(ii) பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் சிரேஷ்ட பொருளாளர் ஊடாக தமது பதவியை இராஜினாமாச் செய்யுமிடத்து அல்லது;
(iii) பல்கலைக்கழகத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்டோ அல்லது நீக்கப்பட்டோ இருந்தால் அல்லது;
(iv) நியாயமான விளக்கம் எதுவும் அளிக்காமல், தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்குச் சமூகமளிக்கத் தவறியிருந்தால்;

அவரது பதவி அல்லது உறுப்புரிமை இழக்கப்பட்டதாகக் கருதப்படும்.

(ஈ) ஏதேனும் பிராந்திய நிலையத்தில் உள்ள உறுப்பினர் ஒருவர் அத்தகைய பிராந்திய நிலையத்திலிருந்து விலகுவாராயின் அத்தகைய பிராந்திய நிலையத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பாண்மை முடிவுக்கு கொண்டுவரப்படும்.

48. பீட மாணவர் சங்கத்தில் அல்லது பீட சபைகளுக்கான மாணவர் பிரதிநிதி பதவிகளில் வெற்றிடம் ஏதாவது ஏற்படுமிடத்து, அவ்வெற்றிடம் பின்வரும் ஏற்பாடுகளுக்கு அமைய நிரப்பப்பட வேண்டும்.

(i) ஏதேனும் பீட மாணவர் சபையின் பதவிதாங்குநர் பதவியிலோ அல்லது பீட மாணவ சங்கத்திலோ

வெற்றிடம் ஏற்படுமிடத்து, எஞ்சிய உத்தியோகத்தர்களிலோ அல்லது உறுப்பினர்களிலோ இருந்து அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கான பதவிதாங்குநர்களை பீட மாணவர் சங்கக் கூட்ம் ஒன்றில் தெரிவு யெ்தல் வேண்டும்.

(ii) ஏதாவதொரு பிராந்திய நிலையத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்புரிமையில் வெற்றிடம் ஏதாவது ஏற்படின், அவதானிப்பாளர் குழுவில் அதே பிராந்திய நிலையத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அடுத்து அதிகூடிய வாக்குகளைப் பெற்ற அபேட்சகர் அவ்வெற்றிடத்தை நிரப்ப நியமிக்கப்படுவார்.

(iii) பீட சபைக்கான மாணவ பிரதிநிதித்துவத்தில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படும் இடத்து அத்தகைய பீட சபைக்கான தேர்தலில் ஆகக்கூடிய வாக்குகளை அடுத்துப்பெற்ற அபேட்சகர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமித்தல் வேண்டும்.

(iv) இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய, ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமிக்கப்பட்ட அபேட்சகர் எவரேனும் தமக்கு முன்பு பதவி வகித்தவரின் முடிவுறாத காலப்பகுதிக்கு மட்டுமே அப்பதவியை வகிக்க உரித்துடையவராவார்.

## பகுதி X
## பீட மாணவ சங்கங்களின் பதவித்தாங்குணர்களின் கடமைகளும் பணிகளும்

49. (i) பீட மாணவர் சங்கத் தலைவரின் கடமைகளும் செயற்பாடுகளும் :

(அ) பீட மாணவர் சங்கக் கூட்டங்களைக் கூட்டுதல்;
(ஆ) பீட மாணவர் சங்கத்தின் சகல கூட்டங்களுக்கும் தலைமை வகித்தல்;
(இ) பீட மாணவர் சங்கத் தீர்மானங்களை நிறைவேற்றுதல்;

(ii) பீட மாணவர் சங்க உப தலைவரின் கடமைகளும் செயற்பாடுகளும் ;
(அ) தலைவர் சமூகமளிக்காதவிடத்து, பீட மாணவர் சங்கத்தின் ஏதாவதொரு கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் ;
(ஆ) தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு தலைவருக்கு உதவுதல் ;
(இ) பீட மாணவர் சங்கத்தினால் அவருக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளையும், செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்;

(iii) பீட மாணவர் சங்கச் செயலாளரின் கடமைகளும் செயற்பாடுகளும் ;
(அ) பீட மாணவர் சங்கச் செயற்பாட்டுக் குறிப்பேடுகளைப் பேணுதல் ;
(ஆ) தலைவரின் பணிப்புரையின் பேரிலோ அல்லது பீட மாணவர் சங்க மொத்த உறுப்பினர் தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாதோரின் எழுத்துமூலக் கோரிக்கையின் பேரிலோ கூட்டங்களைக் கூட்டுதல் ;
(இ) செயற்பாட்டுக் குறிப்புகள் யாவும் சிரேஷ்ட பொருளாளரின் அல்லது பீட மாணவரின் பரிசோதனைக்காக இருத்தலை நியாயப்படுத்தல் ;

(iv) பல்கலைக்கழக மாணவ சங்க பத்திராதிபதியின் கடமைகளும் பணிகளும் பின்வருவன
அ. பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினால் தீர்மானிக்கபட்ட விடயங்கள் தொடர்பாக வெளிப்படுத்தலும் அவற்றை ஏற்பாடு செய்தலும்
ஆ. பல்பலைக்கழக மாணவர் சங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏனைய கடமைகளை கொண்டு நடாத்துதல்.

(v) பீட மாணவர் சங்க கனிஷ்ட பொருளாளரின் கடமைகளும் செயற்பாடுகளும்:

(அ) பீட மாணவர் சங்க நிதிப் பாதுகாப்பை வைத்திருத்தல்.

(ஆ) இவ்வாறான கணக்குகளைப் பேணுவதற்கான சட்டங்களுக்கு இணங்க, இந்நோக்கத்திற்காகப் பேணப்படும் ஏடுகளில் வருமானம், செலவு அனைத்தும் சரியாகப் பதிவு செய்யப்பட்டு, கணக்கு வைக்கப்படுவதை உறுதிப்படுத்துதல் ;

(இ) பீட மாணவர் சங்கத்தினால் ஏதாவது பணம் பெறப்பட்டதை ஒரு வார காலத்திற்குள் சிரேஷ்ட பொருளாளருக்கு அறிவித்தல் ;

(ஈ) சிரேஷ்ட பொருளாளரின் அனுமதியுடன், மாணவர் சங்க நிதியில் இருந்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் ;

(உ) பீட மாணவர் சங்கத்தின் பதவிதாங்குநர்களுக்கான தேர்தல் நடைபெற்ற ஒரு மாத காலத்திற்குள் சங்க உத்தியோகத்தர்களைக் கலந்தாலோசித்த பின்னர், பீட மாணவர் சங்க வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல் ;

(ஊ) தேவைப்படும் போது உப மதிப்பீடுகளைத் தயாரித்தல் ;

(எ) ஒவ்வொரு காலாண்டு காலப்பகுதியில் இறுதி நாளன்று இருந்த நிதி நிலைமை சம்பந்தமாக, அக்காலாண்டுப் பகுதியின் இறுதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் அறிக்கை ஒன்றை பீட மாணவர் சங்கத்திற்குச் சமர்ப்பித்தல் ;

(ஏ) பீட மாணவர் சங்கம், தெரிவுசெய்யப்பட்ட மாணவர் சங்க ஆண்டு இறுதியில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் பீட மாணவர் சங்க வருமான, செலவுக் கூற்றுக்களையும், ஐந்தொகையையும் சிரேஷ்ட பொருளாளரின் ஊடாக, பிரதம நிறைவேற்று அதிகாரியினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரிடம் சமர்ப்பித்தல்.

50. (i) மாணவர் சங்கங்களின் பதவி தாங்குநர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் பின்வரும் வியடங்கள் தொடர்பாக அவர்கள் சந்தேகமின்றி அறிந்திருத்தல் வேண்டும்.

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறான) பல்கலைக்கழகச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களது கடமைகளையும்; பொறுப்புக்களையும்.

(ஆ) பல்கலைக்கழகத்தினால் மாணவர் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியினை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பங்கீடு செய்தல்;

(ii) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தை அமைப்பதற்காக தலைமை தேர்தல் அதிகாரியினால் அழைக்கப்பட்ட கூட்டத்தில், பிரதான மாணவர் ஆலோசகர், சகல கல்விசார் மாணவ ஆலோசகர்கள், பீட மாணவர் சங்கங்களின் சிரேஷ்ட பொருளாளர்கள் ஆகியோர் மேற்குறிப்பிட்ட (அ), (ஆ) பிரிவுகள் தொடர்பாக விளக்கமளிப்பர்.

(iii) பிரிவு 49(v) இல் குறித்துரைக்கப்பட்ட தன்னுடைய கடமைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு கனிஷ்ட பொருளாளரினால் எடுக்கப்படும் சகல தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கு பீட மாணவர் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் தனித்தும் கூட்டாகவும் பொறுப்புடையவராவர்.

## பகுதி XI
## பல்கலைக்கழக மாணவ சங்கம்

51. (i) இலங்கைத்திறந்த பல்கலைக்கழக மாணவர் சங்கம் அனைத்து நிலையங்களிலும் பட்டப்படிப்பிற்கு பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மாணவர் சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும்.

(ii) பல்கலைக்கழக மாணவர் சங்கம் பீட மாணவ சங்கத்தின் பதின்மூன்று 13 உறுப்பினர்களையும் பீட சபைகளுக்கான இரண்டு (2) மாணவ பிரதிநிதிகளையும் உள்ளடக்கும்.

52. (i) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் முதலாவது கூட்டத்திற்கான திகதியை பிரதம நிறைவேற்று அதிகாரி தீர்மானித்தல் வேண்டும். அத்தகைய முதலாவது கூட்டத்தில் கீழே பல்கலைக்கழக மாணவர்

சங்கத்திற்கு குறிப்பிடப்பட்டுள்ள பதவிதாங்குனர்கள் தெரிவு செய்யப்படுவர்.

அ. தலைவர்
ஆ. உபதலைவர்
இ. செயலாளர்
ஈ. பத்திராதிபர்
உ. கனிஷ்ட பொருளாளர்

(ii) பிரதம நிறைவேற்று அதிகாரி, உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் பதவிதாங்குநரைத் தெரிவு செய்யும் பொருட்டு, பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் முதலாவது கூட்டத்தை நடத்துவதற்கான திகதியைக் குறிப்பிடுவார். இத் துணைவிதியின் 41ஆம் பிரிவின் பிரகாரம், பீட மாணவர் சங்கங்களின் 13 உறுப்பினர்கள் மற்றும் பீட சபைகளுக்கான இரண்டு (02) பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டதிலிருந்து நான்கு (04) வாரங்களுக்குள் இத்திகதி குறிக்கப்பட வேண்டும்.

(iii) இக்கூட்டத்தின் நோக்கத்திற்காக பிரதம நிறைவேற்று அதிகாரி, பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட அங்கத்தவர் ஒருவரை பதவி தாங்குநரின் தேர்தல் இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடத்துவதற்கான தலைமை தேர்தல் அலுவலராக நியமிக்கலாம். அவர், கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதுடன், ஒழுக்க சீலத்தைப் பேணுவதற்கும், தேர்தல் சுமுகமாக நடைபெறுவதை நிச்சயப்படுத்துவதற்குமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

(iv) தேர்தல் முடிவுற்ற பின்பு பிரதம நிறைவேற்று அதிகாரி பல்கலைக்கழக மாணவர் சங்க நிறைவேற்றுக்குழுச் செயலாளரின் கையொப்பத்துடன் பல்கலைக்கழக மாணவர் சங்க சிரேஷ்ட பொருளாளராக பல்கலைக்கழக ஆசிரியர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(v) தலைமைத் தேர்தல் அதிகாரி, மேற்கூறப்பட்ட தேர்தல் சம்பந்தமாக ஓர் அறிக்கையை பிரதம நிறைவேற்று அலுவலருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) பல்கலைக்கழக மாணவர் சங்கம், கல்வியாண்டின் ஒவ்வொரு மாதத்திலும் ஒரு கூட்டத்தைக் கூட்டலாம். அவ்வாறான ஒவ்வொரு கூட்டத்திலும் மொத்த உறுப்பினர் தொகையில் மூன்றில் ஒரு எண்ணிக்கையினர் கூட்டத்திற்குரிய குறைந்தபட்ச எண்ணிக்கையினராக இருத்தல் வேண்டும்.

53. (i) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் ஒவ்வொரு பதவி தாங்குநரும், அவர் தெரிவுசெய்யப்பட்ட அந்த மாணவர் சங்க ஆண்டு முடிவில் தன்னுடைய பதவியை இழப்பர்.

(ii) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் எந்தவொரு பதவிதாங்குநரோ, ஒரு மாணவர் சங்க வருடத்திற்கு மேல் அதே பதவியை வகிக்க முடியாது.

(iii) ஏதாவது ஒரு பதவிதாங்குநர்,

(அ) பீட மாணவர் சங்கப் பதவிதாங்குநராக அல்லது எந்தவொரு உறுப்பினராக இருப்பதை இழந்தால்,

(ஆ) பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு முகவரியிடப்பட்ட எழுத்து மூலமான கடிதம் ஒன்றின் மூலம் சிரேஷ்ட பொருளாளர் ஊடாக இராஜினாமாச் செய்த கடிதத்தைச் சமர்ப்பித்தல்.

(இ) நியாயமான காரணம் எதுவும் இன்றி, தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்குச் சமூகமளிக்கத் தவறினால்,

தமது பதவியில் இருந்தோ அன்றி, உறுப்பினா் உரிமையில் இருந்தோ பொருத்தமானவாறு விலகிக்கொண்டதாகக் கருதப்படுவார்.

(iv) மேலே குறிப்பட்ட (iii) ஆம் பிரிவின் கீழ் ஏற்படும் ஒவ்வொரு வெற்றிடமும், பிரிவு 52 ஏற்பாடுகளுக்கு அமைய நிரப்பப்படும். எவ்வாறாயினும், பீட மாணவர் சங்கத்தில் வெற்றிடம் ஏற்பட்டதன் விளைவாக, பல்கலைக்கழக மாணவர் சங்க நிறைவேற்றுக் குழுவில் வெற்றிடம் ஏற்படும் போது, பீட மாணவர் சங்க வெற்றிடத்தை நிரப்பிய பின், பல்கலைக்கழக மாணவர் சங்க நிறைவேற்றுக் குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கான தேர்தலை நடத்தலாம்.

54 (i) பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவரின் கடமைகளும், செயற்பாடுகளும்:

- (அ) பல்கலைக்கழக மாணவர் சங்கக் கூட்டங்களைக் கூட்டுதல்;
- (ஆ) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் சகல கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல்;
- (இ) தமது பல்கலைக்கழக மாணவர் சங்கத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்;

(ii) பல்கலைக்கழக மாணவர் சங்க, உப தலைவரின் கடமைகளும் செயற்பாடுகளும்:

- (அ) தலைவர் சமூகமளிக்காதவிடத்து, சங்கத்தின் ஏதாவதொரு கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல்;
- (ஆ) கடமைகளை நிறைவேற்றுவதற்கு தலைவருக்கு உதவுதல்;
- (இ) சங்கத்தினால் அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் கடமையை, செயலை மேற்கொள்ளல்;

(iii) பல்கலைக்கழக மாணவர் சங்கச் செயலாளரின் கடமைகளும் செயற்பாடுகளும் :

- (அ) பல்கலைக்கழக மாணவர் சங்கச் செயற்பாட்டுக் குறிப்பேடுகளைப் பேணல்.
- (ஆ) தலைவரின் பணிப்புரையின் பேரிலோ அல்லது சங்க மொத்த உறுப்பினர் தொகையின் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாதோரின் எழுத்துமூல கோரிக்கையின் பேரிலோ பல்கலைக்கழக மாணவர் சங்கக் கூட்டங்களைக் கூட்டுதல்.
- (இ) செயற்பாட்டுக் குறிப்புகள் யாவும், பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பதிவு செய்யப்பட்ட மாணவரின் பரிசோதனைக்காக இருத்தலை உறுதிப்படுத்தல்.

(iv) பல்கலைக்கழக மாணவ சங்க பத்திராதிபதியின் கடமைகளும் பணிகளும் பின்வருவன-

- (அ) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக அறிவூட்டலும் அவற்றைப் பகிரங்கப்படுத்தலும்
- (ஆ) பல்பலைக்கழக மாணவர் சங்கத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏனைய கடமைகளை கொண்டு நடாத்துதல்.

55. பிரிவு 54 (v) உள்ள ஏற்பாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளையும் பணிகளையும் கனிஷ்ட பொருளாளர் பூர்த்தி செய்கின்ற போது எடுக்கின்ற அனைத்து தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளிற்கு பல்கலைக்கழக மாணவ சங்க உறுப்பினர்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்புடையவராவர்.

56. பீட மாணவ சங்கம் அல்லது பல்கலைக்கழக மாணவ சங்கத்தின் உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் பிரிவுகள் 49 (V) மற்றும் 54 (V) ஆகியவற்றின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள அவன்/அவள்/அவர்களுடைய நிதிசார் கடப்பாடுகளை பூர்த்தி செய்ய தவறுகின்ற போது அத்தவறுகை பல்கலைக்கழகத்தின் மாணவ ஒழுக்காற்று துணைவிதிகளின் கீழ் கையாளப்படும்.

57. இத் துணைவிதியின் பொருள் விளக்கம் சம்பந்தமாக ஏதேனும் வினா எழுப்பப்படுகின்ற போது அது பல்கலைக்கழக பேரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் பேரவையின் தீர்மானம் முற்றும் முடிவானதாகும்.

58. இத் துணைவிதியின்,

**'ஆலோசனை குழு'** என்பது தேர்தல் நடாத்துதல் தொடர்பாக தேர்தல் அதிகாரி, பதில் தேர்தல் அதிகாரி, பிரதித் தேர்தல் அதிகாரி மற்றும் பிரதம தேர்தல் அதிகாரி ஆகியோருக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு பிரதம நிறைவேற்று அதிகாரியால் நியமிக்கப்படும் ஒரு குழு

**'பிரதித்தேர்தல் அதிகாரி'** என்பது பிரதம நிறைவேற்று அதிகாரியினால் ஒருபிராந்திய நிலையத்திற்கு ஒவ்வொரு பீட மாணவர் சங்க 13 உறுப்பினர்களையும் பீடசபைகளுக்காக இரண்டு (2) உறுப்பினர்களையும் நியமிப்பதற்கான தேர்தலை நடத்தும் அதிகாரியைக் குறிக்கும்.

**'கணக்காய்வாளர்'** என்பது, பல்கலைக்கழக மாணவர் சங்கம் அல்லது பீட மாணவர் சங்கம் என்பனவற்றின் கணக்குகளை, கணக்காய்வு செய்வதற்காக பிரதம நிறைவேற்று அலுவலரினால் நியமிக்கப்பட்ட ஒருவர்.

**'பேரவை'** என்பது, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பேரவையாகும்.

**'பதில் தேர்தல் அதிகாரி'** என்பது, தேர்தல் அதிகாரி இல்லாதபோது மற்றும் அல்லது தேர்தல் அதிகாரியின் அறிவுறுத்தல்களின் மீது செயற்படும் பிரதம நிறைவேற்று அதிகாரியினால் நியமிக்கப்பட்ட, ஒவ்வொரு பீட மாணவர் சங்க 13 உறுப்பினர்களையும் பீட சபைகளுக்கான 2 பிரதிநிதிகளையும் நியமிப்பதற்கான தேர்தலை நடத்தும் அதிகாரியைக் குறிக்கும்.

**'பீடாதிபதி'** என்பது, ஒவ்வொரு பீடத்தினதும் பீடாதிபதி அல்லது அந்நேரத்தில் பீடாதிபதிக்காகப் பதில் கடமையாற்றும் ஒருவர்.

**'தேர்தல் செய்தி'** என்பது அனைத்து பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் தேர்தலை அறிவிக்கும் தேர்தல் அதிகாரியுடைய செய்தி

**'தேர்தல் அதிகாரி'** என்பது, பிரதம நிறைவேற்று அதிகாரியினால் நியமிக்கப்பட்ட, ஒவ்வொரு பீட மாணவர் சங்க 13 உறுப்பினர்களையும் பீட சபைகளுக்கான 2 பிரதிநிதிகளையும் நியமிப்பதற்கான தேர்தலை நடத்தும் அதிகாரியைக் குறிக்கும்.

**'பீடம்'** என்பது, சட்டத்தின் கீழ் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் தாபிக்கப்பட்ட ஏதாவதொரு பீடம்.

**'அவதானிப்பாளர் குழு'** என்பது, பிராந்திய நிலையங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகூடிய வாக்குகளைப் பெற்றவரால் பிராந்திய நிலையங்களில் 13 பதவிகளும் நிரப்பப்பட்டதன் பின், அடுத்து அதிகூடிய வாக்கு எண்ணிக்கையைப் பெற்ற குறிப்பிட்ட மாணவர் தொகையினைக் குறிக்கும்.

**'பிரதம நிறைவேற்று அதிகாரி'** என்பது, உபவேந்தர் அல்லது அந்நேரத்தில் உபவேந்தர் அலுவலகத்தின் கடமைகளை நிறைவேற்றும் ஒருவர்.

**'கற்கை நிகழ்ச்சித் திட்டம்'** என்பது, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும்

ஒரு பட்டப்டிப்பு கல்விசார் நிகழ்ச்சித் திட்டமாகும்.

**'பிராந்திய நிலையம்'** என்பது, பேரவையினால் பிரகடனப்படுத்தப்பட்ட திறந்த பல்கலைக்கழகத்தின் நிலையமாகும்.

**'பதிவு செய்த மாணவன்'** என்பது, இந்த துணை விதியின் நோக்கத்திற்காக பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் மட்டம் 3 தொடக்கம் 6 வரை பதிவு செய்துள்ள மாணவர்கள் ஆவர். இது, இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மாணவர்களையும் உள்ளடக்கும். எனினும், இது, சான்றிதழ், டிப்ளோமா, பட்டப்பின் பட்டம், தொடர் கல்வி என்பவற்றுக்கு பதிவு செய்துள்ள மாணவர்களை உள்ளடக்காது.

**'பதிவாளர்'** என்பது, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அல்லது அந்நேரத்தில் பதிவாளருக்கான கடமைகளை நிறைவேற்றும் ஒருவர்.

**'தலைமை தேர்தல் அதிகாரி'** என்பது, ஒரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பையும், வாக்குகளின் எண்ணிக்கையையும் நடத்துவதற்கான பிரதம நிறைவேற்று அலுவலரினால் நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரி.

**'மாணவர் சங்க ஆண்டு'** என்பது, பேரவை வேறு விதமாகத் தீர்மானித்தாலொழிய, பீட மாணவர் சங்க 13 உறுப்பினர் தேர்தல் முடிவடைந்ததில் இருந்து ஆரம்பமாகும் ஒரு பஞ்சாங்க ஆண்டு.

**'பீட சபைகளுக்கான மாணவர் பிரதிநிதித்துவம்'** என்பது, தேர்தல் முடிவடைந்த திகதியில் இருந்து ஒரு வருட காலப்பகுதிக்கு தேர்தல் மூலமாக பொருத்தமான பீட சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட இரண்டு (02) மாணவர்களை உள்ளடக்கும்.

**'பல்கலைக்கழக சட்டம்'** என்பது, பின்கொண்டு திருத்தப்பட்டவாறு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்.

**'பல்கலைக்கழகம்'** என்பது இலங்கை திறந்த பல்கலைக்கழகமாகும்.

59. இந்தத்துணை விதியின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து ஆங்கில உரை முன்னிலைபெறும்.

## முதலாவது அட்டவணை
## பீட மாணவர் சங்கத்தின் நியமனப்பத்திர மாதிரி

தேர்தல் அதிகாரி,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

பொறியியல் தொழில்நுட்பவியல் / மானுடவியல் சமூக விஞ்ஞானங்கள் / இயற்கை விஞ்ஞானங்கள் /கல்வி/சுகாதார விஞ்ஞானம்/ பீட மாணவர் சங்கம்

### நியமனப்பத்திரம்

கீழே ஒப்பமிடப்பட்ட முன்மொழிபவரும், வழிமொழிபவருமாகிய நாம் ............................................................................ (அபேட்சகரின் முழுப் பெயர்) என்பவரை இத்துணைவிதியின் வரைவிலக்கணத்திற்கு அமைவாக பதிவுசெய்யப்பட்ட

………………………………………………………….. (பீட மாணவர் சங்கத்தின் பெயர்) இன் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்காக அபேட்சகராக நியமனம் செய்கிறோம்.

(அ) இவ் அபேட்சகர் மேற்கூறப்பட்ட ………………………………………….. பீடத்தின் பதிவு செய்யப்பட்ட மாணவர் எனவும், இத்துணைவிதியின் பகுதி III இன் ஏற்பாடுகளுக்கு அமைய தேர்தலில் பங்குபற்றுவதற்குத் தகுதியுடையவர் எனவும் நாம் சான்றளிக்கின்றோம்.

அபேட்சகரின் பெயர்: ………………………………………………………………………………..
மாணவர் பதிவிலக்கம்: ………………………………………………………………………….
முகவரி: ………………………………………………………………………………………….

…………………………….
அபேட்சகரின் கையொப்பம்

முன்மொழிபவரின் முழுப்பெயர்: ……………………………………………………………..
மாணவர் பதிவிலக்கம்: ………………………………………………………………………….
முகவரி: ………………………………………………………………………………………….

………………………………….
முன்மொழிபவரின் கையொப்பம்

வழிமொழிபவரின் முழுப்பெயர்: ……………………………………………………………….
மாணவர் பதிவிலக்கம்: ………………………………………………………………………….
முகவரி: ………………………………………………………………………………………….

..………………………………
வழிமொழிபவரின் கையொப்பம்

என் முன்னிலையில் கையெப்பமிடப்பட்டது

……………………………………………
தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி

## பீட சபைகளுக்கான மாணவ பிரதிநிதிகளுக்கான நியமனப்பத்திர மாதிரி

தேர்தல் அதிகாரி,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

பொறியியல் தொழில்நுட்பவியல் / மானுடவியல் சமூக விஞ்ஞானங்கள் / இயற்கை விஞ்ஞானங்கள் /கல்வி/சுகாதார விஞ்ஞானம்/ பீட மாணவர் சங்கம்

### நியமனப்பத்திரம்

கீழே ஒப்பமிடப்பட்ட முன்மொழிபவரும், வழிமொழிபவருமாகிய நாம் ……………………………………………………………………. (அபேட்சகரின் முழுப் பெயர்) என்பவரை இத்துணைவிதியின் வரைவிலக்கணத்திற்கு அமைவாக பதிவுசெய்யப்பட்ட

………………………………………………………….. (பீடத்தின் பெயர்) மாணவப் பிரதிநிதி உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்காக அபேட்சகராக நியமனம் செய்கிறோம்.

(அ) இவ் அபேட்சகர் மேற்கூறப்பட்ட ………………………………………….. பீடத்தின் பதிவு செய்யப்பட்ட மாணவர் எனவும், இத்துணைவிதியின் பகுதி III இன் ஏற்பாடுகளுக்கு அமைய தேர்தலில் பங்குபற்றுவதற்குத் தகுதியுடையவர் எனவும் நாம் சான்றளிக்கின்றோம்.

அபேட்சகரின் பெயர்: ………………………………………………………………………..
மாணவர் பதிவிலக்கம்: ……………………………………………………………………….
முகவரி: …………………………………………………………………………………

……………………………
அபேட்சகரின் கையொப்பம்

முன்மொழிபவரின் முழுப்பெயர்: ………………………………………………………..
மாணவர் பதிவிலக்கம்: ………………………………………………………………………
முகவரி: …………………………………………………………………………………

………………………………….
முன்மொழிபவரின் கையொப்பம்

வழிமொழிபவரின் முழுப்பெயர்: ………………………………………………………….
மாணவர் பதிவிலக்கம்: ………………………………………………………………………
முகவரி: …………………………………………………………………………………

..……………………………….
வழிமொழிபவரின் கையொப்பம்

என் முன்னிலையில் கையெப்பமிடப்பட்டது

……………………………………………………
தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது பிரதி தேர்தல் அதிகாரி

## இரண்டாவது அட்டவணை

ஆட்சேபனை தெரிவிக்கும் மாணவரின் முழுப்பெயர்:…………………………………………………..
ஆட்சேபனை தெரிவிக்கும் மாணவரின் முதலெழுத்துக்களுடன் கூடிய முழுப்பெயர்:
…………………………………………………………………………………………………
பதிவிலக்கம்: ………………………………………………………………………………….
கற்கை நிகழ்ச்சித் திட்டம்: ………………………………………………………………….
பீடம்: ………………………………………………………………………………………..
ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட அபேட்சகரின் முழுப்பெயர்:…………………………………………
அபேட்சகரின் பதிவிலக்கம்: ……………………………………………………………………
அபேட்சகர் போட்டியிடும் பீட மாணவர் சங்கம்/பீடசபைகளுக்கான பிரதிநிதித்துவத்திற்கான போட்டியிடும் பீடம்: ………………………………………………………………………

2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க மாணவர் சங்க துணைவிதியின் இயைபான பிரிவினைக் குறிப்பிட்டு, ஆட்சேபனைகளுக்கான அடிப்படைகள்:

ஆட்சேபனை தெரிவிக்கும் இடம்: ……………………………………………………………………
ஆட்சேபனை தெரிவிக்கும் திகதி: ……………………………………………………………………
ஆட்சேபனைகளைத் தெரிவிக்கும் நேரம்: ……………………………………………………………

ஆட்சேபனைகளைத் தெரிவிக்கும் மாணவர் கையொப்பம்

**உறுதிப்படுத்தல்**

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………… என்பவருக்கு, ……………..……………………………………………… பீடத்தில் ……………………………………… பதவிக்கு, தேர்தலில் போட்டியிடும் ……………………………………………………………… என்பவருக்கு எதிராக …………..………………… திகதி ………….……… மணிக்கு உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆட்சேபனை பத்திரத்தைப் பெற்றுக்கொண்டதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: ……………………

…………………………………
தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது
பிரதி தேர்தல் அதிகாரி

தேர்தல் அதிகாரி

## மூன்றாவது அட்டவணை

நிராகரிப்புக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்கும் அபேட்சகரின் முழுப்பெயர்: ……………………………………………………………………………………………………

ஆட்சேபனை தெரிவிக்கும் அபேட்சகரின் பெயர் முதலெழுத்துக்களுடன்: ………………………….…………………………………………………………………

பதிவிலக்கம்: ……………………………………………………………………………..

கற்கை நிகழ்ச்சித் திட்டம்: ……………………………………………………………………

பீடம்: ……………………………………………………………………………………..

அபேட்சகர் தாம் போட்டியிடும் பீட மாணவர் சங்கம்: ………………………………………………

2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க மாணவர் சங்கத் துணைவிதி இணையான பிரிவுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்கான காரணம்:

மறுப்புத் தெரிவிக்கும் இடம்: …………………………………………………………………………

மறுப்புத் தெரிவிக்கும் திகதி: …………………………………………………………………………

மறுப்புத் தெரிவிக்கும் நேரம்: …………………………………………………………………………

…………………….……………………………

நிராகரிப்புக்கு எதிராக ஆட்சேபனை

தெரிவிக்கும் அபேட்சகரின் கையொப்பம்

---

## உறுதிப்படுத்துதல்

……………………………………………………… அவர்களுக்கு ………………………………….. பீடத்தில் ……………………………………… பதவிக்கான நியமனப்பத்திரத்தை நிராகரிப்பதற்கு எதிராக, ஆட்சேபனை தெரிவிக்கும் பத்திரம் ……………………….. ஆம் திகதி ………..…. மணிக்கு கிடைக்கப்பெற்றோம் என்பதை அறியத்தருகின்றோம்.

திகதி: ………………………..

…….……………………….

தேர்தல் அதிகாரி மற்றும் அல்லது

பிரதி தேர்தல் அதிகாரி

தேர்தல் அதிகாரி

## (அ) நான்காவது அட்டவணை

சீட்டின் அடிப்பகுதி இல:.............................................................................................

பதிவு இல:.............................................................................................

பீடம்:.............................................................................................

பிராந்திய நிலையம் குறிப்பிட்ட பீட மாணவர் சங்கத்திற்கு பிராந்திய நிலையத்திலிருந்து................. உறுப்பினர் வரையிலான தாங்கள் தெரிவுசெய்ய விரும்பும் உறுப்பினர் ஒருவரினதும் பெயருக்கு எதிரே "X" அடையாளம் இடுக.

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

*அகர வரிசையில் அபேட்சகரின் பெயர்களைத் தருக.

தேர்தல் அதிகாரி

**(ஆ)**

சீட்டின் அடிப்பகுதி இல:………………………………………………………………………………

பதிவு இல:…………………………………………………………………………………………

பீடம்:………………………………………………………………………………………………

பிராந்திய நிலையம் குறிப்பிட்ட பீட சபைகளுக்கான பிரதிநிதிகளாக பிராந்திய நிலையத்திலிருந்து…………….. உறுப்பினர் வரையிலான தாங்கள் தெரிவுசெய்ய விரும்பும் உறுப்பினர் ஒருவரினதும் பெயருக்கு எதிரே ‘‘X’’ அடையாளம் இடுக.

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

*அகர வரிசையில் அபேட்சகரின் பெயர்களைத் தருக.

# ஐந்தாம் அட்டவணை

ஒன்றிணைக்கப்பட்ட பிராந்திய நிலையங்களிலிருந்து ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்திற்குமுரிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை

| பிராந்திய நிலையம் | ஒன்றிணைக்கப்பட்ட கற்கைநிலையம் | மாணவர் எண்ணிக்கை | | ஒதுக்கப்பட்ட மாணவ பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| கொழும்பு பிராந்திய நிலையம் | கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி | EDU | | |
| | | ET | | |
| | | HSS | | |
| | | NS | | |
| | | HSc. | | |
| கண்டி பிராந்திய நிலையம் | கேகாலை, ஹட்டன் | EDU | | |
| | | ET | | |
| | | HSS | | |
| | | NS | | |
| | | HSc. | | |
| மாத்தறை பிராந்திய நிலையம் | காலி, அம்பலாந்தோட்டை | EDU | | |
| | | ET | | |
| | | HSS | | |
| | | NS | | |
| | | HSc. | | |
| மட்டக்களப்பு பிராந்திய நிலையம் | அம்பாறை, திருகோணமலை | EDU | | |
| | | ET | | |
| | | HSS | | |
| | | NS | | |
| | | HSc. | | |
| யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் | கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு | EDU | | |
| | | ET | | |
| | | HSS | | |
| | | NS | | |
| | | HSc. | | |
| அநுராதபுர பிராந்திய நிலையம் | பொலநறுவை | EDU | | |
| | | ET | | |
| | | HSS | | |
| | | NS | | |
| | | HSc. | | |
| குருநாகல் பிராந்திய நிலையம் | குளியாப்பிட்டிய, புத்தளம் | EDU | | |
| | | ET | | |
| | | HSS | | |
| | | NS | | |
| | | HSc. | | |
| பதுளை பிராந்திய நிலையம் | பண்டாரவெல, மொனராகலை | EDU | | |
| | | ET | | |
| | | HSS | | |
| | | NS | | |
| | | HSc. | | |